Registered as a Newspaper in Ceylon ★ விலை சதம் 10

# ஈழநாடு

THE EELA NADU

தேசிய தினசரி National Tamil Daily

மலர் 7 (8-12-65) இதழ் 299

விசுவாவசு கார்த்திகை 23 ஷஃபான் பிறை 14 புதன்கிழமை

## தபால் முத்திரையில் கம்பன்

திருச்சி, டிச. 7

கவிச்சக்கரவத்தி கம்பனின் திருவுருவம் தாங்கிய தபால் முத்திரைகள் தமிழ் நாட்டில் வெளியிடப்படவிருக்கின்றன. இன்னும் சில மாதங்களில் கம்பன் முத்திரைகள் வெளியிடப்படும் என சென்னை தபால் சேவை டைரக்டர் திரு. தீனதயாளன் இன்று அறிவித்தார்.

கம்பனின் முத்திரை சம்பந்தமான மாதிரிப் படங்கள் புதுடில்லிக்கு அனுப்பி வைக்கப் பட்டிருப்பதாய் திரு. தீனதயாளன் மேலும் தெரிவித்தார்.

வள்ளுவனின் ஞாபகார்த்தத்தை முன்னிட்டு ஏற்கனவே டில்லி அரசாங்கம் தபால் முத்திரைகள் வெளியிட்டிருப்பது அனைவரும் அறிந்ததே. ஆனால் தமிழ் இலக்கியத்தில் முதல் ஸ்தானம் வகித்த கம்பனின் பெருமை இப்போதுதான் டில்லி அரசாங்கத்திடம் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. இராமாயணத்தை ஆக்கிய மகா கவிகள் பலர். வால்மீகி, துளசிதாசர்; எழுத்தச்சன், பலராம்தாஸ், கம்பர் ஆகியோர். இவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள். ஆனால் சமஸ்கிருதத்தில் வால்மீகி எழுதிய

(6-ம் பக்கம் பார்க்க)

# நாட்டைக் காக்கத் தயாராக வேண்டுமாம்

## சிங்கள பௌத்தர்களுக்கு சிறிமா அழைப்பு

குருநாகல், செவ்வாய்

''நாட்டையும் பௌத்த சமயத்தையும் சிங்கள சமூகத்தையும் பாதுகாப்பதற்கு சிங்கள பௌத்தமக்கள் இரத்தம் சிந்தக்கூடத் தயாராக இருக்கவேண்டும்'' என்று முன்னாள் பிரதமரும் தற்போதைய எதிர்க்கட்சித் தலைவருமான திருமதி சிறிமா பண்டாரநாயக்கா வாரியப்பொல என்னுமிடத்தில் பொதுக் கூட்டமொன்றில் பேசுகையில்கேட்டுக்கொண்டார்.

'சமஷ்டிக்கட்சியுடன் ஐக்கிய தேசியக்கட்சி இரகசியமாகச் செய்துகொண்ட ஒப்பந்தத்தின் பிரதியொன்று அவர்களுடைய இரும்புப் பெட்டியிலிருந்து எடுக்கப்பட்டு இப்பொழுதுஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிவசம் இருக்கிறதென்பதை அறிய ஜே ஆர். ஜயவர்த்தன அதிர்ச்சியடைவார்'' என்று திருமதி பண்டாரநாயகா கூறினார். அவர் மேலும் குறிப்பிட்டதாவது-

### உத்தியோக மொழி வேடிக்கை

உத்தியோக மொழி என ஒன்று இப்பொழுது இல்லை. சிங்களம் மட்டும் சட்டம் கேலிக்கூத்தாகிவிட்டது. வடக்கிலும், கிழக்கிலும் தமிழில் நிர்வாகமென்

6-ம் பக்கம் பார்க்க

## கொழும்பு மாநகரசபைத் தேர்தல்

### புதிய தேர்தல் சட்டப்படி நடைபெறும்

பம்பலப்பிட்டி, செவ்.

இம்மாதம் 18-ந் திகதி சனிக்கிழமை நடைபெறவிருக்கும்கொழும்பு மாநகரசபைத் தேர்தலுக்கான ஒழுங்குகளை தேர்தல் கந்தோர் முடிவு செய்துவிட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. 133 வாக்களிப்பு நிலையங்களிலும் காலை 8 மணிக்கு வாக்களிப்பு ஆரம்பமாகி மாலை5-30 மணிக்கு முடிவடையும். தேர்தல் முடிவுகள் அன்றிரவே அறிவிக்கப்படும்.

தேர்தலில் போட்டியிடும் அரசியற்கட்சிகள்தமதுதேர்தற் பிரசாரக் கூட்டங்களை புதிய தேர்தல் சட்டப்படி இம்மாதம் 16-ம் தி திக்குப் பிறகு நடாத்துவதற்குஅனுமதிக்கப்படமாட்டா.

ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் போட்டியிடும் அபேட்சகர்களை ஆதரித்து நடைபெறும் பிரசாரக் கூட்டங்களை மந்திரி திரு. வி. ஏ. சுகததாசாபொறுப்பேற்றுக் கவனித்துவருகிறார், இறுதிப் பிரசாரக் கூட்டங்களில் பிரதமர் டட்லி சேனநாயக்கா, ராஜாங்க மந்திரி ஜே. ஆர். ஜெயவர்த்தன ஆகியோர்கலந்துகொள்வர்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, இடதுசாரிக்கட்சி பிரசாரக் கூட்டங்களில் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா கலந்துகொண்டு உரைநிகழ்த்திவருகிறார்.

டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா, திரு. பெர்னாட் சொல்சா ஆகியோர் லங்கா சமசமாஜக்கட்சி பிரசாரக் கூட்டங்களிலும், திரு. பீட்டர் கெனமன், டாக்டர் எஸ். ஏ. விக்கிரமசிங்க ஆகியோர் கம்யூனிஸ் கட்சி பிரசாரக் கூட்டங்களில் உரை நிகழ்த்துகின்றனர்,

### முதல் முறையாக தேர்தல் அட்டைகள்

புதிய தேர்தல்சட்டத்தின்படி முதல்முறையாக உள்ளூராட்சி தேர்தலுக்கு தேர்தல் அட்டைகள் அனுப்பப்படுகின்றன. ஏற்கனவே இத்தேர்தல் அட்டைகள் பெரிய தபாற் கந்தோரிலிருந்து வாக்காளர்களுக்கு அனுப்ப ஆரம்பிக்கப்பட்டது.

இம்மாதத்தில் நடைபெறவிருக்கும்உள்ளூராட்சி தேர்தல் விபரங்கள்வருமாறு:—

11-ம் தேதி — கோட்டே நகரசபை, ஹோமகம பட்டினசபை, அலுத்ஹம பட்டினசபை, ஹலவெல பட்டினசபை, காங்கேசன் துறை பட்டினசபை, புத்தளம் நகரசபை, எட்டியாந்தோட்டை பட்டினசபை.

18-ந் தேதி — கொழும்பு மாநகரசபை, காலி மாநகரசபை, வேருவல நகரசபை, மாத்தறை நகரசபை.

23-ந் தேதி — வனப்புவ பட்டினசபை.

## சர்க்கரை கிடைக்கும்

யாழ்ப்பாணம், புதன்

தைப்பொங்கலை முன்னிட்டு ஒருகூப்பனுக்கு இரண்டு அவுன்ஸ் சர்க்கரை கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. நெஸ்பிரே போன்ற பால் மாவுக்கள் சாதாரணமாக எல்லாக் கடைகளிலும் கிடைக்கக் கூடியதாகவிருக்கிறது. நாட்டின் பல இடங்களிலும் புளி பற்றுக்குறை ஏற்பட்டுள்ளது.

விற்பனையாகும் சர்க்கரையையும், இருப்பிலுள்ள சர்க்கரையையும் கணக்கெடுப்பதற்குப் பரிசோதகர்கள் கடைகளுக்கு எந்நேரத்திலும் செல்லலாமென அறிவிக்கப்பட்டுள்ளது. (ந. நி.)

ஜாகர்த்தா, டிச. 7

மலேஸியாவை நசுக்கும் கொள்கையை இந்தோனேஷியா தொடர்ந்து கடைப்பிடிக்கும் என ஜனாதிபதி சுகர்னோ கூறினார்.

சமீப புரட்சியில் சம்பந்தப்பட்டவர்களைத் தண்டிக்கும்பொருட்டு விசேஷ ராணுவ நீதிமன்றம்ஒன்றை நிறுவுவதுபற்றியும்சுகர்னோ மேலும் கூறினார்.

வடமாகாண ஆசிரியர் சங்கம்

அவசர பொதுக்கூட்டம்

நிலையான திட்டமற்ற இடமாற்றத்தை எதிர்க்கும் நோக்கமாக நடைபெறும்.

காலம்:- 12-12-65 ஞாயிற்றுக்கிழமை
காலை 9-30 மணி,

இடம்:- மாநகரசபை மண்டபம், யாழ்ப்பாணம்.

அங்கத்தவர்கள் அனைவரும் தவறாது சமுகமளிக்கவும்.

கொக்குவில் இந்துக்கல்லூரி,
கொக்குவில்,
8-12-65.

செ. குணபாலசிங்கம்,
பொதுச்செயலாளர்,
வ. மா. ஆ. சங்கம்.

## ஆசிரியர் இடமாற்றத்தில் அரசியல்தலையீடுஏன்?

### ஊர்காவற்றுறை எம். பி. விளக்கம்

யாழ்ப்பாணம். புதன்

''இலங்கையின் ஒருபகுதியில் தமிழாசிரியர்கள் மேலதிகமாக இருந்தும், இன்னுமோர் பகுதியில் ஆசிரியர் இல்லாத காரணத்தினால், தமிழ்பிள்ளைகளுக்கு தமிழ் மூலம் கல்விகற்க முடியாதிருந்தால் இந்த நிலையைச் சீர்ப்படுத்தவேண்டுமென்பதில் எந்தவிதமான அபிப்பிராயபேதமும் இருக்கும் என்று நான் கருதவில்லை. தென்னிலங்கையிலுள்ள தமிழ்க்குழந்தைகளுக்கு தமிழையும் தமிழ்மூலம் கல்வியையும்கற்பிக்கவேண்டியது அத்தியாவசியமாகும்.''

ஊர்காவற்றுறை எம். பி. திரு. வி. நவரத்தினம், ஆசிரியர்கள் இடமாற்றம் சம்பந்தமாக வெளியிட்டுள்ள ஒரு அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

திரு. நவரத்தினம் வெளியிட்டுள்ள இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டிருப்பதாவது:

வட இலங்கையில் இன்று தமிழாசிரியர்களிடையே பெரும் பரபரப்பு ஏற்பட்டிருக்கிறதென்பதை உணர்கிறோம். வடஇலங்கையில் கடமையாற்றிவந்த தமிழாசிரியர்களில் சிலர் தென்னிலங்கைத் தமிழ்ப்பாடசாலைகளுக்கு மாற்றப்பட்டிருப்பது காரணமாக, சம்பந்தப்பட்டவர்களின் மத்தியில் பெரும் அதிருப்தி உண்டாகியிருக்கிறது. இது காரணமாக சம்பந்தப்பட்டவர்களின் மத்தியில் பெரும் அதிருப்தி உண்டாகியிருக்கிறது. இது காரணமாக, பற்பலவிதமான குறைகுற்றங்கள் சுமத்தப்பட்டுவருகின்றன. உண்மையை யாவரும் அறிந்திருக்க வேண்டியது அவசியம்.

அரசாங்கத்தின் புள்ளிவிபரங்களின்படி வட இலங்கை பாடசாலைகளில் மேலதிகமான ஆசிரியர்கள் இருக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. அதேசமயத்தில் தென்னிலங்கையில் ஆசிரியர்கள் பற்றாக்குறை காரணமாக, பல தமிழ் பாடசாலைகளும், பொது பாடசாலைகளின் தமிழ்ப் பிரிவுகளும் மூடப்பட்டுஉள்ளன என்பதும் உண்மை.

இலங்கையின் ஒருபகுதியில் தமிழாசிரியர்கள் மேலதிகமாக இருந்தும் இன்னுமோர் பகுதியில, ஆசிரியர் இல்லாக் காரணத்தினால், தமிழ்ப்பிள்ளைகளுக்கு தமிழ் மூலம் கல்விகற்கமுடியாதிருந்தால் இந்த நிலைமையைச் சீர்ப்படுத்தவேண்டுமென்பதில் எந்தவிதமான அபிப்பிராய வித்தியாசம்

(6-ம் பக்கம் பார்க்க)

## தேர்தல் கந்தோரில் திடீர் மரணம்

யாழ்ப்பாணம், புதன்

தேர்தல் கந்தோரில் கடமையாற்றிய திரு. சி. அருணகிரிநாதன் (53) நேற்று கடமையாற்றும் மேசையிலிருந்தபடியே திடீரென மூர்ச்சையாகி மயக்கமுற்று மரணமானார்.

யாழ்ப்பாணம் யாழ் வீதியைச்சேர்ந்த இவர் வழமைபோல நேற்று வேலைக்கு வந்தாரென்றும் அவர் நிலையில் ஒருவித மாற்றமும் காணப்படவில்லை எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

சில வாரங்களுக்கு முன்னர் இதே கந்தோரில் திரு. விஸ்வலிங்கம் என்பவர் கடமையாற்றும்பொழுது மாரடைப்பினால் மரணமானார் என்பது குறிப்பிடத்தக்கது. இது தேர்தல் கந்தோரில் நிகழ்ந்த இரண்டாவது திடீர் மரணமாகும்.

## வல்வெட்டித்துறை பட்டின சபை

### 5 வட்டாரங்களில் 13 பேர் போட்டி

வல்வெட்டித்துறை, செவ்வாய்

வல்வெட்டித்துறைப் பட்டின சபைத் தேர்தலுக்கான அபேட்சாபத்திரங்கள் இன்று உதவிதேர்தல் அதிகாரி திரு. வி. முருகேசுவிடம் சமர்ப்பிக்கப்பட்டன. ஐந்துவட்டாரங்களிலும் 13 அபேட்சகர்கள் போட்டியிடுகின்றனர். போட்டியிடும் அபேட்சகர் விபரம் வருமாறு:-

1-ம் வட்டாரம்- வே. க. சபாரத்தினம், கு. க. அருளம்பலம்.

2-ம் வட்டாரம்- க. நாராயணசாமி, தி. இராசவேல்.

3-ம் வட்டாரம்- சோ. சுந்தரலிங்கம், வி. இரத்தினவடிவேல். பொ. திருஞானசம்பந்தா.

4-ம் வட்டாரம்- த. நவரத்தினம், க. அருமைச்செல்வம்.

5-ம் வட்டாரம்- க. ஆறுமுகம், க. ஆறுமுகம். ச. குமாரசாமி, நா. பாக்கியலிங்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

'தமிழ், சமயம் ஆகிய இரண்டும் என் இரு கண்கள், அவ்விரண்டும் ஒளிகுன்ருமல் இறுதி வரை காத்துப் பயன்கொள்வதே என் கடன், அவை வாழப் பணிபுரிவதே என் வாழ்வின் குறிக்கோள்.'

—ஆறுமுகநாவலர்

ஈழநாடு

EELA NADU: National Tamil Daily Post Box 49, JAFFNA
Telegrams: EELA NADU Jaffna. Phone: 3..

யாழ்ப்பாணம்விசுவாவசுஆண்டு கார்த்திகை மீ 23 உ (8-12-65)

## தரக்கட்டுப்பாடு

இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் பொருள்கள் தரமானவையாக இருக்கவெண்டுமென்பதற்காக பொருள்களின் தரத்தைப் பரிசோதிப்பதற்கு தரக்கட்டுப்பாட்டுப் பிரிவு ஒன்று நிறுவப்பட்டுள்ளது. எப்பொழுதோ எடுக்கப்பட்டிருக்கவேண்டிய இந்த நடவடிக்கை இப்பொழுதாவது செயலாக்கப்பட்டிருப்பதைவரவேற்கவேண்டும்

உள்நாட்டில் உற்பத்தியை அதிகரிக்கவேண்டியது எவ்வளவு அவசியமோ அந்த அளவு உள்நாட்டு உற்பத்திப் பொருள்கள் தரம்வாய்ந்தவையாக இருக்கவேண்டியதும் அவசியமாகும். உள்நாட்டு உற்பத்தியைப் பெருக்கவேண்டும் என்ற ஆர்வத்திலும் அவசரத்திலும் தரம் குறைந்த பொருள்களை உற்பத்திசெய்வதால் யாருக்கும் பயன் ஏற்படாது. பத்து வருடங்களுக்கு முன்னிருந்ததைவிட இன்று நாட்டில் அன்ருடப் பாவனைப் பொருள்களும் உணவுப் பொருள்களும் உற்பத்திசெய்யப்படுகின்றன. வெளிநாட்டு இறக்குமதிக் கட்டுப்பாடு விதிக்கப்பட்டதைத் தொடர்ந்து உள்நாட்டில் உற்பத்தி அதிகரிக்கப்பட்டதுடன் புதிய பொருள்களும் உற்பத்தி செய்யப்பட்டன. இந்த முயற்சி பாராட்டப்படவேண்டியதெனினும் உள்நாட்டு உற்பத்திப் பொருள்கள் தரத்தில் குறைந்தவையாக இருப்பின் மக்களின் ஆதரவு அவைகளுக்குக் கிடைக்கமுடியாது. சவர அலகுகள் இங்கு உற்பத்தி செய்யப்படுகின்றன. அவை வெளிநாட்டு சவர அலகுகளைவிட பாவனையாளருக்கு அதிக உபயோகமானதாகஉள்ளவென்று கூறமுடியாது. இது போன்று வெளிநாட்டுப் பொருள்களின் தரத்திற்கேற்ப உள்நாட்டுப் பொருள்கள் தரம்வாய்ந்தவையாக இல்லாதுவிடின் அதனுல் உற்பத்தியாளருக்கும் பாவனையாளருக்கும் நஷ்டம் ஏற்படும்.

இங்கு உற்பத்தி செய்யப்பட்டு வெளிநாடுகளுக்கு அனுப்பப்படும் பொருள்களும்கூட தரம் வாய்ந்தவையாக இருக்கவேண்டும். தரம்குறைந்த பொருள்களை வெளிநாடுகளுக்கு அனுப்புவதன் மூலம் நாட்டுக்கு நஷ்டம் ஏற்படுவதுடன் நாட்டின் பெயருக்கும் இழுக்கு ஏற்படும். இதே போல் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யும் பொருள்கள் சிலவும், விலை குறைவு காரணமாக தரம் குறைந்தவையாக இருக்கக்கூடும்.

எனவே உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பொருள்கள் தரமானதாக இருக்கவும் வெளிநாடுகளுக்குத் தரமான பொருள்களை ஏற்றுமதி செய்து பணமும் பெயரும் பெறவும், தரமான இறக்குமதிப் பொருள்களை இங்கு அனுமதிக்கவும் தரக்கட்டுப்பாட்டுப் பிரிவு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என நம்பலாம்.

## அடக்கியே தீரவேண்டும்

ரொடீஷியாவில் 40 லட்சம் ஆபிரிக்க மக்களின் உரிமைகளையும் துச்சமாக மதித்து ஒரு தலைப்பட்சமாக சுதந்திரத்தைப்பறித்தெடுத்து 'மகாராணிக்கு' எதிராக 'புரட்சி' செய்துள்ள அயன் ஸ்மித்துக்கு எதிராக பிரிட்டிஷ் அரசாங்கம் உறுதியான, கடுமையான, 'ஆயுத' நடவடிக்கையை மேற்கொள்ளப்போவதில்லை என்பது, கரீபா அணைத் திட்டத்தைப் பாதுகாப்பதற்கு ஸாம்பியா அதிபர் விடுத்த வேண்டுகோள் மீது பிரிட்டன் எடுத்த நடவடிக்கையில் இருந்து தெளிவாகிவிட்டது. இந்நிலையில் ரொடீஸ்யாவிலுள்ள நாற்பது லட்சம் ஆபிரிக்க மக்களின் சுதந்திரத்துக்காக இதர ஆபிரிக்க நாடுகள் அடுத்து என்ன செய்ய வெண்டுமென்பதைத் தீர்மானிப்பதில் தவறில்லை.

ரொடீஷிய புரட்சி அரசாங்கத்தைப் பணிய வைக்க பொருளாதாரத் தடை நடவடிக்கைகளை மேற்கொள்ள பிரிட்டன் தீர்மானித்துள்ளது உண்மைதான். ஆனுல் பிரிட்டிஷ் அரசாங்கம் பங்காளியாகவுள்ள பிரிட்டிஷ் பெட்ரோலியம் கம்பெனி அனுப்பியுள்ள 12,000 தொன் எண்ணெய் இன்னும் பத்துத் தினங்களுக்குள் ரொடீஷியா போய்ச் சேரவிருக்கிறதாம். இது தவிர தென்னுபிரிக்காவும் போர்ச்சுக்கலும் ரொடீஷியாவுக்கு உதவி ளளிக்க முன்வந்துள்ளன. எனவே பொருளாதாரக் தடை நடவடிக்கைகள் ரொடீஷிய வெள்ளைபர் ஆட்சியைப் பணிய வைக்குமென எதிர்பார்க்கமுடியாது.

இம்மாதம் 15-ம் திகதிக்குள்சட்ட விரோதமான ஸ்மித்தின் அரசாங்கத்தை நசுக்காவிடில் காமன்வெல்த்திலிருந்து விலகிவிடப்போவதாகவும் ராஜீய உறவுகளைத் துண்டித்துக்கொள்ளப் போவதாகவும் ஆபிரிக்க நாடுகள் பல எச்சரித்துள்ளன. காமன்வெத் குடும்பத்துக்கு மட்டுமல்ல; உலகமெலாம் ஒரு குடும்பமாக வாழவேண்டுமென்ற நோக்கத்துக்கே இது ஆபத்தாகும். பிரிட்டன் என்னதான் சமாதானம் சொன்னுலும் சமரச முயற்சிசெய்தாலும் ஆபிரிக்கமக்களின் உரிமையைப் பறித்துக்கொண்ட வெள்ளையர் கூட்டமொன்றுக்கு உடந்தையாக இருந்ததென்ற பழியை நீக்க முடியாததாகிவிடும்.

ரொடீஷியாவில் வெள்ளையர்செய்த இச்சட்டவிரோத நடவடிக்கையை ஆபிரிக்கர் செய்திருந்தால் பிரிட்டன் சமாதான 'அஹிம்சை' முறையைப் பின்பற்றியிருக்குமா? முன்பு இந்தியாவில் விடுதலைப் போராட்டத்தை நசுக்க பிரிட்டன் அஹிம்சையைக் கடைப்பிடித்ததா? சில மாதங்களுக்குமுன் ஏடனில் பிரிட்டன் என்ன செய்தது?

காமன்வெல்த்தின் ஒற்றுமையையும் உலக அமைதியையும் பாதுகாப்பதற்கு ஸ்மித் கூட்டத்தின் [illegible] பிரிட்டன் [illegible] வேண்டும்.

# யாழ். அரசாங்க அதிபருக்கு பருத்தித்துறை எம். பி. பாராட்டு

வல்வெட்டித்துறை. செவ்.

''நமது நாட்டில் அன்ருடப் பாவனைப் பொருட்களின் விலைவாசிகளைக் குறைக்க தேசிய அரசாங்கம் முயற்சி எடுத்துவரும் இவ்வேளையில் சில வர்த்தகர்கள் பொருட்களின் விலைகளைக் கூட்டுவதில் கண்ணுங் கருத்துமாக ஈடுபட்டு வருவதாகத் தெரியவருகிறது. நாட்டை 'சுரண்டல்' காரர்களின் சுவர்க்கலோகமாகவும், ஏழைகளின் நரகலோகமாகவும் இருக்கவிடக்கூடாதென்பதே நமது அவாவாகும்''

வல்வெட்டித்துறை சனசமூக சேவா நிலைய மண்டபத்தில் நடைபெற்ற கூட்டத்தில் பருத்தித்துறைஎம். பி. திரு. கே. துரைரத்தினம் பேசுகையில் மேற்கண்டவாறுகுறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:—

வடபகுதியில் 'பதுக்கல்' காரர்களிடமிருந்தும், கொள்ளை லாபமடிப்பவர்களிடமிருந்தும் பொதுமக்களைக் காப்பதற்கு நமது அரசாங்கஅப்பர் திரு. நெவில் ஜெயவீரா தீவிர நடவடிக்கை எடுத்துவருவது பாராட்டவேண்டியதொன்று''.

திரு. எஸ். ஞானமூர்த்தி தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திருவாளர்கள் நவரத்தினம், க. வேதநாயகம், எஸ். சிவராசா, எஸ். சந்தரலிங்கம், எஸ். இராநாதன் ஆகியோரும் பேசினர்.

# விரும்பிய ஒருவரை மணம்முடிப்பது அடிப்படை மனிதஉரிமையாகும்

## நாடுகடத்த உத்தரவு வழக்கில் வழக்கறிஞர் தியாகலிங்கம் தொகுப்புரை

பம்பலப்பிட்டி, செவ்வாய்

''ஒரு பெண் தனது அன்புக்குரிய ஒருவரை தனது வாழ்க்கைத் துணைவனுகத் தேர்ந்தெடுக்கும் உரிமையும், ஒரு ஆண் தனது ஆசைக்குரிய ஒருத்தியை தனது இல்லக்கிழத்தியாகத் தேர்ந்தெடுக்கும் உரிமையும் அடிப்படையான மனித உரிமையாகும். யுவதி ஒருத்திதான் விரும்பும் ஆடவனை மணம் முடிக்க அனுமதிக்கப்படவேண்டும் என பொமக்கள் நலனுரிமை கோருகிறது'' என்று இலங்கை வந்திருந்த வெளிநாட்டுப் பெண் ஒருத்தி இங்கு திருமணம் செய்தபின்னர் நாடுகடத்த அரசாங்கம் விதித்த உத்தரவுக்கு எதிராக அந்தப் பெண் சார்பில் தொடரப்பட்ட வழக்கில் வழக்காளி தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் ஸி. தியாகலிங்கம் கியூ. ஸி. தமது தொகுப்புரையின்போது குறிப்பிட்டார்.

1958-ம் ஆண்டு நவம்பரில் 1959 ஜனவரி வரை செல்லுபடியாகக்கூடியவிசாவில் இலங்கை வந்த லீலாவதிஎன்றயுவதி, குடியேற்ற வெளியேற்ற அதிகாரிக்குக் காலத்துக்குக்காலம் விண்ணப்பித்து 1960 வரை இங்கிருக்க அனுமதி பெற்ருர். இதற்கிடையில் 1959 ஜனவரியில் பெல்மதுளையைச் சேர்ந்த வம்சாவழிப்பிரஜையான கே. கிருஷ்ணன் என்பவரை இந்த யுவதி திருமணம் செய்துகொண்டார். 1960-ல் இவர் பிரஜா உரிமைக்கு மனுச்செய்தார். 1961-ல் பிரஜா உரிமைக்கு விண்ணப்பிப்பதற்குரிய பத்திரம் பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சின் நிரந்தரக் காரியதரிசியிடமிருந்து கிடைத்தது. இதை உரியபடி நிரப்பி அனுப்பியபின் 1964 மார்ச் மாதத்தில் பிரஜா உரிமை விண்ணப்பும் ஏற்றுக்கொள்ளப்படவில்லை எனவும், மூன்று மாதத்துக்கிடையில் நாட்டை விட்டு வெளியேறவேண்டும் எனவும் இல்லாவிடில் கைதுசெய்யப்படும் எனவும் பாதுகாப்பு அமைச்சரான பிரதமரிடமிருந்து பதில் கிடைத்தது.

திரு. தியாகலிங்கம் தமது தொகுப்புரையின்போது மேலும் கூறியதாவது:-

ஒரு பெண்ணே அல்லது ஒரு ஆணே தாம் விரும்பிய வாழ்க்கைத் துணைவரைத் தேர்ந்தெடுப்பதற்குஉரிமையுண்டு என ஐ நா மனித உரிமை சாஸனம் குறிப்பிடுகிறது. இலங்கை ஐ நா வின் ஒரு அங்க நாடு. ஐ நா சாஸனத்தில் கூறப்பட்டிருக்கும் மிக அடிப்படையான மனித உரிமையையே விண்ணப்பதாரர் கோருகிருர். முன்னுள் பிரதமர் அரசாங்க கொள்கைக்கிணங்கவேவிண்ணப்பதாரரை நாட்டை விட்டுவெளியேறுமாறு உத்தரவிட்டிருக்கிருர். பொதுமக்களின் நலன் இதுவல்ல. மந்திரி தனது நிர்வாகமுறைக்காக இந்த உத்தரவை இடலாம். ஆனுல் அதை நீதிமன்றத்தில் நிலைநாட்ட முடியாது. அது நீதியுமல்ல. பொதுமக்கள் நலன் என்ருல் என்ன? இந்தப் பெண்ணை நாடுகடத்திஞல் அவரின் இரண்டு பிள்ளைகளும் யாருடைய தயவில் வாழ்வது? அரசாங்கத்தின் இதுவிஷயமான கொள்கையில் பொதுநலன் எதுவும் இல்லை

இவ்வழக்கை விசாரணை செய்த பிரதம நீதியரசர் சன்சோனி நீதியரசர் சிறிமானே ஆகியோர் தீர்ப்பு வழங்குவதை ஒத்திவைத்துள்ளனர்.

## அரசாங்க அதிபர் கூட்டும் மகாநாடு

யாழ்ப்பாணம், புதன்

வடபகுதியில் கூட்டுறவு இலாகாவின்கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ள துறைமுகத் தொழிலாளர் சங்கங்களுக்குப் பொருள் இறக்குமதி வேலைகளைச் சமமாக பரவலாகப் பகிர்ந்தளிப்பது சம்பந்தமாக ஒரு மகாநாட்டை அரசாங்க அதிபர் கூட்டவிருக்கிருர். இம்மாதம் 9ந் தேதி நடைபெறவிருக்கும்இம்மகாநாட்டில்கலந்துகொள்ளுமாறு இங்குள்ள ஆறு கூட்டுறவுக் கப்பல் தொழிலாளர் யூனியன்களின் பிரதிநிதிகளை அரசாங்க அதிபர் அழைத்துள்ளார். யாழ்ப்பாணம் உதவி கூட்டுறவுக் கமிஷனரும் மகாநாட்டில் கலந்துகொள்வார்.

(ந. நி.)

## நாட்டிலும் நகரிலும்

யாழ்ப்பாணத்தில் ஒரு பனம்பொருள் ஆராய்ச்சி நிலையம் அமைக்கவேண்டுமென்று பருத்தித்துறை, உடுப்பிட்டி எம். பி.க்கள் சமர்ப்பித்த தீர்மானத்தை பிரதிநிதிகள்சபை ஏகமனதாக ஏற்றுக்கொண்டிருப்பது மகிழ்ச்சிதரும் விஷயம். காங்கேசன்துறை துறைமுக அபிவிருத்தியைப் போல, இதுவும் பல வருடங்களாக யாழ்ப்பாணப் பிரதிநிதிகளால் அடிக்கடி தூண்டப்பெற்று, அடிக்கடி ஒத்திவைக்கப்பட்டு, இப்பொழுதுதான் நிறைவேறியது.

இலங்கையின் மொத்த விஸ்தீரணத்தில் 7.8 வீதம் நெல்லும், 3.8 வீதம் தென்னையும், 3.5 வீதம் றப்பரும் 3.9 வீதம் தேயிலையும் 0.4 வீதம் பனையும் வளர்கின்றன. அதாவது சுமார் 70,010 ஏக்கரில் பனைமரம் தளைக்கிறது. முதலில் சொல்லப்பட்ட நான்கு பயிர்களுக்கும் தனிப்பட்ட ஆராய்ச்சி நிலையங்கள் இருக்கின்றன. பனைக்கு மட்டும் இல்லை.

பனை நட்டாயிரம், பட்டாயிரம் என்று சொல்வார்கள். மனிதனுக்கு எந்தவிதமான கஷ்டமுமின்றித் தானுகவே வளர்ந்து ஆயிரம் பிரயோசனங்களைத் தரும் கற்பகதரு அது. தென்னைமரத்தைக் காட்டிலும் கூடுதலான பலன்களைத் தருவது பனை. அமெரிக்காவுக்கு தூத்துக்குடியிலிருந்து பனையோலைகள் ஏற்றுமதி செய்யப்படுவதாகவும் அதனுல் எத்தனையோ டாலர் வருமானம் கிடைக்கிறதென்றும் திரு. துரைரத்தினம் பார்லிமெண்டில் தெரிவித்தார். பனம் வித்துக்குள் இருக்கும் வெண்மையான பதார்த்தத்திலிருந்து 'செலுலோஸ்' என்ற பொருளைத் தயாரிக்கமுடியுமென்றுதிரு. சிவசிதம்பரம் கூறியுள்ளார். பனைமரத்தில் கிடைக்கும் பொருட்களிலிருந்து விஞ்ஞான முறைப்படி இன்னும் எத்தனை எத்தனை உபயோகமான பொருட்கள் கிடைக்குமோவென்பதைப் பனம்பொருள் ஆராய்ச்சிநிலையம் ஒன்று ஏற்பட்ட பின்புதான் கூறமுடியும்.

யாழ்ப்பாணத்திலும் ஏன் இலங்கை முழுவதிலும் தாராளமாகவளரும் இன்னுமொரு மரம் வாழை. குலை ஈன்றதும் வாழைமரத்தை வெட்டி எறிந்துவிடுகிறேம். வாழைத்தடல் சில இடங்களில் உண்ணும் கலயமாக உபயோகிக்கப்படுகிறது. ஆனுல் பெரும்பாலான வாழைத்தண்டுகள் அழுகிப் போய் குப்பையோடு குப்பையாய் வீசப்படுகின்றன. அல்லது நிலத்தில் வெட்டி தாழ்க்கப்படுகின்றன.

வாழை நாரிலிருந்து முற்காலத்தில் தென்னிந்தியாவில் உடுபுடவைகூட செய்தார்களாம். இத்தொழில் போதிய ஆதரவு கிடைக்காமையால் அழிந்துபோய் விட்டது. இப்பொழுது மீண்டும் இத்தொழிலை உயிர்ப்பிக்க முயற்சிகள் நடந்து வருவதாகவும் வாழைமடலிலிருந்து துணிவகையும் கயிறும் தயாரிக்கக்கூடிய ஓர் இயந்திரம் ஜெர்மனியில் கண்டுபிடிக்கப்பட்டிருப்பதாகவும் புதுடில்லியில் தெரிவித்திருக்கிருர்கள்.

யாழ்ப்பாணத்தில் பனம்பொருள் ஆராய்ச்சியுடன் வேறு ஆராய்ச்சிகளையும் நடத்தக்கூடிய ஒரு பொது விஞ்ஞான ஆராய்ச்சிநிலையம் அமைத்தாலும் அது வரவேற்கத்தக்கது.

ஃ ஃ ஃ

இன்று சந்திர கிரகணம் என்று ஆங்கிலப் பத்திரிகை கூறுகிறது. ஆனுல் எங்கள்

(6-ம் ப்க்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "ஜனவரி முதல்வாரம ஆயூப்பை சந்திக்க எதிர்பார்க்கிறேன் பாகிஸ்தானுடன் போர் தவிர்ப்பு செய்ய இன்னும் தயார்"

## அமெரிக்க செனட்டர்களுக்கு திரு. லால்பகதூர் பேட்டி

புதுடில்லி, டிச. 7

பாகிஸ்தானுடன் போர் தவிர்ப்பு ஒப்பந்தம் செய்துகொள்ள இந்தியா இன்னும் தயாராய்இருப்பதாக பிரதமர் திரு. லால்பகதூர் சாஸ்திரி தம்மைப் பேட்டிகண்ட அமெரிக்க செனட்டர்களிடம் கூறினர்.

''பல நாடுகளுக்கிடையே பல பிரச்னைகள் தீராமல் இருக்கின்றன. அவற்றைத் தீர்க்க அந்த நாடுகள் சண்டைக்குப் போகவில்லை. ஆனல் பாகிஸ்தான் கடந்த 18 வருடங்களில் மும்முறை இந்தியா மீது ஆக்கிரமிப்பு நடத்திவிட்டது. பாரதத்தின் மீது அது கொண்டுள்ள வெறுப்பே இதற்குக்காரணம். இவற்றை எதிர்ப்பதைத்தவிர இந்தியாவுக்கு வேறுவழியில்லை. நாங்கள் சமாதானத்தில் நாட்டம் கொண்டிருப்பது. பலவீனத்துக்கு அறிகுறியல்ல என்பதைக் காட்டியிருக்கிறேம்' என்றும் அமெரிக்க செனட்டர்களிடம் அவர் கூறினர்.

### ஜனவரி முதல் வாரம்

ஜனவரி முதல் வாரத்தில் அயூப்கானை, டாஷ்கண்டில் சந்திக்கக்கூடும் என அவர் கூறினர். 'இதுநல்ல முயற்சி என்று மட்டுமே சொல்ல வேண்டும். இருநாடுகளின் உறவும் திருந்தினல் என்னைவிடயாருக்கும் அது மகிழ்ச்சியளிக்காது' என்றும் திரு. சாஸ்திரி தெரிவித்தார்.

''சீன ஊடுருவல் கவலையளித்துவருகிறது. இதற்குப் பல காரணங்கள் இருக்க முடியும் பாகிஸ்தானும் சீனவும் ஏதாவது செய்யமுயற்சிக்கலாம். இருநாடுகளும் அடிக்கடி ஆலோசனையில் ஈடுபட்டிருக்கின்றன. அந்த இரு நாடுகளுக்கு மிடையே பொது லட்சியம்இல்லை. இந்தியாவின் பொருளாதார முன்னேற்றம் குறைந்தால் அது சீனவுக்குமகிழ்ச்சியளிக்கும்'' என்றும் அவர் கூறினர்.

அமெரிக்காவின் உதவி நிறுத்தப்பட்டது பற்றிக் குறிப்பிடுகையில், இந்தவிஷயத்தை அமெரிக்காதான் தீர்மானிக்கவேண்டும் என்றுர் இந்தியப் பிரதமர்.

செனட்டர்கள் இதற்குப் பதிலளிக்கையில் இந்தியாவுடனை நட்புரிமையை ஜனதிபதி ஜோன்ஸன் தெரிவிக்கும்படி கூறியதாகத்தெரிவித்தார்கள். இந்தியாவின் கொள்கையை நன்ருகப்புரிந்துகொண்டு தாங்கள் அமெரிக்கா திரும்புவதாயும் எல்லாப் பிரச்னைகளிலும் அமெரிக்காவும் இந்தியாவும் ஒரே திக்கில் இல்லாமல், வெவ்வேறு திக்குகளில் சென்றுல் அது அமெரிக்காவுக்கு மிகவும் கவலையளிக்கும் என்றும் தூதுகோஷ்டித் தலைவர் கூறினர்.

### ரஷ்யா அறிவிக்கும்

இதற்கிடையில் டில்லியிலுள்ள ரஷ்ய ஸ்தானிகர் திரு. பெனடிக்டோவ் சோவியத் பிரதமர் திரு. கோஸிஜினின் கடிதம் ஒன்றை பிரதமரிடம் சமர்ப்பித்தார். சாஸ்திரி-அயூப் சந்திப்புக்கான திகதி பற்றி ரஷ்யா விரைவில் அறிவிக்கும் எனக் கூறப்பட்டது.

## டிகால் நிலைமை

பாரிஸ், டிச. 7

ஜனதிபதிக்கான வாக்கெடுப்பில் டிகால் தெளிவான வெற்றிபெருதது பிரான்சின் சர்வதேச அலுவல்களையும் அரசியல் பேச்சுக்களையும் பாதிக்கும்எனக் கூறப்படுகிறது. பிரெஞ்சு வெளிமந்திரி மாரில் கூடி மேர்விங் இவ்வாரம் இத்தாலிய வெளிமந்திரியை ஐரோப்பிய பொதுச்சந்தை பற்றி சந்திக்கவிருந்தார். ஜனதிபதி பிரச்னை தீர்க்கப்படும்வரை இச் சந்திப்புக்கள் தாமதிக்கப்படலாம் எனக் கருதப்படுகிறது, (பி.டி.ஸி.)

## லொறியில் மோதி 100 பேர் பலி!

லோன்டோபே, டிச. 7

இங்குள்ள ஸோட்டோபோவா நகரில் லொறி ஒன்று ஒரு கூட்டத்தைப் பிளந்துகொண்டு சென்றதால் சுமார் 100 பேர் கொல்லப்பட்டனர் என்றும், 114 பேர் காயமடைந்தனர் என்றும் அறிவிக்கப்பட்டது. (பி.டி.ஸி.)

## ஸ்டுவர்ட் பேச்சில் முன்னேற்றமில்லை

லண்டன், டிச. 7

ரஷ்யத் தலைவர்களுடன் தாம் நடத்திய பேச்சுக்களில், வியட்னமில் சமாதானத்தை ஏற்படுத்தும் விஷயமாக முன்னேற்றம் எதுவும் ஏற்படவில்லையென பிரிட்டிஷ் வெளிநாட்டுமந்திரி திரு. ஸ்டுவர்ட் பார்லிமெண்டில் கூறினர். ஆனல் அங்கு அமைதி ஏற்படுவதை ரஷ்யா விரும்புவதாகவும் அவர் கூறினர்.

# திபேத்தில் பலபிக்குகள் தற்கொலை செய்தனர்!

புதுடில்லி, டிச. 7

திபேத்தில் டாஷில்ஹூன் போமடாலயத்திலுள்ள சில பிக்குகள் சமீபத்தில் தற்கொலை செய்துகொண்டார்கள். பஞ்சன்லாமாவைப் பகிரங்கமாக அவமதிக்க சீனர்கள் முயன்றதால் இச்சம்பவம் நடைபெற்றதென தலாய்லாமாவின் தலைமைக் காரியாலயம் அறிவித்தது.

பஞ்சன்லாமாவைக் கண்டிக்கத் தவறிய குற்றத்திற்காக மற்றும் அநேக பிக்குகளும், உயர் லாமாக்களும் சிறைவைக்கப்பட்டிருக்கிறர்களென அந்த அறிவிப்பு கூறியது.

பஞ்சன்லாமாவின் மீது மக்களின் கோபத்தை வெளியிட, நிர்ப்பந்தமாக கையெழுத்துச் சேர்க்கும் வேலையில் சீனர்கள் சமீபத்தில் ஈடுபட்டிருந்தார்கள் என்றும், ஆனல் திபேத்தியர்கள் இதற்குக் கீழ்ப்படிய மறுத்துவிட்டார்களென்றும் அறிவிக்கப்பட்டது. (பி. டி. ஐ.

# ரொடீஷியாவுக்கு பி. பி. ஸி. ஒலிபரப்புக்கள்

## எல்லைக்கப்பால் பிரிட்டன் நிறுவும்

லண்டன், டிச. 7

பெச்சுவானலாந்தில் கட்டப்படும் ரேடியோ நிலையத்தில் இரண்டாவது டிரான்ஸ் மீட்டர் ஒன்றை பிரிட்டிஷ் அரசாங்கம் அமைக்கவிருக்கிறது. பி. பி. ஸி. ஒலிபரப்புக்கள் ரொடீஷியாவில் கேட்குமுகமாக இவ்வாறு செய்யப்படுகிறதெனகாமன்வெல்த் உறவுக்காரியாலயம் அறிவித்தது.

1000 மைல் தூரத்திற்குக் கேட்கக்கூடிய ஒலிபெருக்கி சாதனங்களை மார்க்கோனி கம்பெனி அளித்திருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

ரொடீஷிய எல்லையிலிருந்து20 மைல் தூரத்திலுள்ள பிரான்சிஸ் டவுனில் மத்திய அலை நிலையமொன்று அமைக்கப்படுமென பிரிட்டிஷ் பிரதமர் திரு. வில்சன் காமன்ஸ் சபையில் அறிவித்திருந்தார். பி. டி. ஸி.

## 15 மைல் எல்லை கலகப்பகுதி

புதுடில்லி, டிச. 7

மணிப்பூரிலிருந்து 15 மைல் நீள பாரத—பர்மா எல்லைப்பகுதி கலகப்பகுதியாக பிரகடனம்செய்யப்பட்டிருக்கிறது. பகைநாகர்கள் நுழைவதை தடுக்க இந்த ஏற்பாடு கிழக்கு பாகிஸ்தானிலிருந்துதிரும்பி வரும் நாகர்களுக்கும் இந்தியக் காவலர்களுக்கு மிடையே சமீபத்தில் 5மணி நேரம் பலமான சண்டை நடைபெற்றிருப்பதாயும், மேல்விபரம் கிடைக்கவில்லையென்றும் அறிவிக்கப்பட்டது.

## சீனர்கள் அமைத்த சாலை

புதுடில்லி, டிச. 7

சாம்பி பள்ளத்தாக்கில் ஏதோ ஒரு இடத்திலிருந்து நாதுலா கணவாய்வரை 12 மைல் நீள மோட்டார் சாலை ஒன்றை சீனர்கள் அமைத்திருக்கிறர்கள் என்றும், கடந்த ஐந்து மாதங்களில் இது அமைக்கப்பட்டது என்றும் சிக்கிம் மகாராஜா அறிவித்திருக்கிறர்.

## 30, 200 பேருக்கு பிரஜாஉரிமை

புதுடில்லி, டிச. 7

கடந்த பெப்ரவரி மாதம் முதல் இதுரை கிழக்கு பாகிஸ்தானிலிருந்து இடம் பெயர்ந்துள்ள 30,200 பேருக்கு இந்திய பிரஜா உரிமை அளிக்கப்பட்டிருப்பதாய் இங்கு அறிவிக்கப்பட்டது.

## தென்சீனவில் நாசவேலைகள்

ஹாங்காங், டிச. 7

தென்சீனவில் பல நாசவேலைகள் நடைபெற்றிருப்பதாகவும், ஆலைகளுக்கு வெடி வைக்கப்பட்டதாகவும், இதனல் 7 சீனர்கள் மாண்டதாகவும் அறியப்பட்டது. நவசீன ஸ்தாபகர் டாக்டர் சன்யாட் ஸனின் பிறந்தநாள் கொண்டாட்ட வைபவத்தின்போது இச்சம்பவங்கள் நடைபெற்றதாம்.

# ஆயுதப் பரிகரண மகாநாடு கூடும்

## அடுத்த 18-ம் திகதி நடத்த ரஷ்யா, அமெரிக்கா இணக்கம்

லண்டன், டிச. 7

அடுத்த மாதம் 18-ம் திகதி ஜெனிவாவில் ஆயுதப் பரிகரண மகாநாட்டை கூட்டுவதென அமெரிக்காவும், ரஷ்யாவும் இணக்கம் தெரிவித்திருக்கின்றன.

சமீபத்திய ஐ.நா.பொதுச் சபையின் கோரிக்கைக்கிணங்க இம்மகாநாடு மூன்று மாதங்களுக்குப்பின் மீண்டும் கூட்டப்படுகிறது.

பிரிட்டனும் இது விஷயமாக விவாதிக்கத் தயாராய் இருக்கிறது.

அணு ஆயுதங்கள் பரவுவதைத் தடுக்கும் விஷயம் மகாநாட்டில் ஆராயப்படும்

அணுஆயுதங்கள் பரவுவதைத் தடுக்கும் விஷயம் பற்றி ரஷ்யாவும், பிரிட்டனும் முக்கியத்துவம் அளித்திருப்பதாக பிரிட்டிஷ் வெளிநாட்டு மந்திரி திரு. ஸ்டூவர்ட் கூறினர்.

## ஜாப். மாலுமிகள் வேலைநிறுத்தம்

டோக்கியோ, டிச. 7

வேலைநிறுத்தம் செய்யப்படும் ஜப்பானிய மாலுமிகள் மேலும் ஒருவாரம், வேலை நிறுத்தம் செய்வதெனத் தீர்மானித்திருக்கிறர்கள். வேலைநிறுத்தம் காரணமாக நாட்டிலுள்ள 55துறைமுகங்களில் 1000 கப்பல்கள் முடங்கிக்கிடக்கின்றன.

## 149 தளங்கள் கலைக்கப்படும்

வாஷிங்டன், டிச. 7

உள்நாட்டிலுள்ள 149 ராணுவத்தளங்களைக் கலைத்துவிட அமெரிக்கா முடிவு செய்திருப்பதாய் அறிவிக்கப்படுகிறது.

# ரஷ்ய செய்மதி சந்திரனில் மெதுவாக இறங்கத் தவறியது

மாஸ்கோ, டிசம்பர் 7

'லூனர்-8' என்ற ரஷ்ய செய்மதி சந்திரனில் மெதுவாக இறங்கும் முயற்சியில் தோல்வியுற்றதாக மாஸ்கோவில் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டது. சந்திரனை அது அடைந்ததென்றும், ஆனல் மெதுவாக இறங்க அது தவறிவிட்டது என்றும் அறிவிக்கப்பட்டது.

கடந்த ஒருவருடத்தில் சந்திரனில் மெதுவாக இறங்க ரஷ்யா மேற்கொண்ட முயற்சிகளில் இது நான்காவதாகும்.

இந்தச் செய்மதியின் போக்கைத் தொடர்ந்து அவதானித்துவந்த பிரிட்டிஷ் நோர்டர் பேங்க் அவதானநிலைய டைரக்டர் விடுத்துள்ள அறிக்கையில் ரஷ்ய விஞ்ஞானிகள் முன்னெப்போதும் இல்லாதபடி மிகவும் சரியாக இந்தச் செய்மதியைச் செலுத்தினர்களெனக் கூறியிருக்கிறர்.

அதேசமயம் அமெரிக்க செய்மதியான 'ஜெமினி-7'ல் இருந்த சாரதி, கப்பலிலிருந்து வெளிவான மண்டலத்துக்கு வந்து தனது உடைகளை அகற்றினர். இறுக்கமான விசேஷ உள் ஆடையுடன் கப்பலுடன் அவர் தொடர்ந்து சென்றுரென்றும், புதிய உடை அவருக்கு மிகவும் வசதியாக இருந்ததென்றும் அறிவிக்கப்பட்டது.

இதற்கிடையில் பிரான்ஸ் தனது 2வது செய்மதியை அனுப்பியிருக்கின்றது. அமெரிக்காவிலுள்ள கலிபோர்னியாவிலிருந்து இது அனுப்பப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிராமியக் கலைகளை பாதுகாப்பது மக்கள் கடனாகும்

சுழிபுரம், செவ்வாய்

'நமது தொன்மை வாய்ந்த கிராமியக் கலைகள் அழிந்தொழிந்து போகாமல் பாதுகாக்கும் பெரும் பணி இன்று பொது மக்களையே சார்ந்துள்ளது. ஆபாச சினிமாப்படங்களினால் தமிழ்ச் சமூகம் இன்று தன் பண்பாட்டை மறந்து, கலையை மறந்து அநாகரிகமான வழியிற் செலுத்தப்படுகின்றது. இந்நிலை அடியோடுமாறவேண்டும், தமிழினத்தின் பண்பாட்டைப் பாதுகாக்கும் வகையில் நமது கிராமியக் கலைகளை வளர்க்க நாம் முயலவேண்டும்' என்று வழக்கறிஞர் திரு. ச. ஸ்ரீநிவாசன் வட இலங்கைக் கலைக்கழகத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டத்திற்குத் தலைமைவகித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

வலி வடக்குக் காரியாதிகாரி திரு. ரி. முருகேசம்பிள்ளை பேசுகையில், 'வட இலங்கையில் இத்தகைய கழகமொன்று இருக்கவேண்டியது மிகவும் அவசியமாகும். இதன் மூலம் தமிழ் மக்கள் தங்கள் சொத்துக்களை வளர்க்கமுடியும்' என்றும் கூறினார். மக்கள் கவிமணி மு. இராமலிங்கம், சி. உ. சோமசேகரம், கழகச் செயலாளர் த. துரைசிங்கம் உட்பட மற்றும் பலர் பேசினர்.

நடப்பு வருட உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

போஷகர் டாக்டர் எச், டபிள்யு. தம்பையா கியூ. ஸி. உப போஷகர்கள் சமூக ஜோதி சி. தியாகராஜா, சி. உ. சோமசேகரம், யாழ். அரசாங்க அதிபர் நெவில்ஜெயவீரா, வடபகுதி உதவி வித்தியாதிபதி திரு. தணிகாசலம், யாழ். மாநகரசபை மேயர் திரு. மகாதேவா, தலைவர் வழக்கறிஞர் சி. ஸ்ரீநிவாசன், உபதலைவர்கள் திரு. ரி. முருகேசம்பிள்ளை (வலி வடக்கு காரியாதிகாரி) எஸ். ஸி. மாணிக்கவாசகர் (வடபகுதி உள்ளூராட்சி ஆணையாளர்), மக்கள் கவிமணி மு. இராமலிங்கம், செயலாளர் த. துரைசிங்கம் உபசெயலாளர் மு. தம்பிஐயா, தனாதிகாரி த. மயில்வாகனம். நிர்வாகசபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

## போஸ்ட்மாஸ்டர் சுருக்கிட்டு தற்கொலை

குருநாகலை, செவ்.

குருநாகல் தபாற்கந்தோரில் கடமையாற்றும போஸ்ட்மாஸ்டரான சின்னப்பு கந்தசாமி என்பவர் கடந்த வெள்ளிக்கிழமை காலையில் நீர்க்கொழும்பு வீதியில் உள்ளஅவரது வீட்டில் சுருக்கிட்டுத் தற்கொலைசெய்துகொண்டார். இவர் முதல் நாள் மாலை காணிவல்ஒன்றிற்குப் போய்வந்த பின்னர் முகத்தில் பலத்தகாயங்கள் காணப்பட்டதாக மரண விசாரணையின்போது தெரிவிக்கப்பட்டது. தற்கொலை எனத்தீர்ப்பளிக்கப்பட்டது.


குழந்தைக்கு மிகச் சிறந்தது....



செரமி

பேபி ஓடிக்கொலோன்

உங்களுக்கும் சிறந்தது எங்கும் கிடைக்கும்.


## கட்டிடத் திறப்புவிழா

யாழ்ப்பாணம், புதன்

காரைநகர் ஆயிலி சிவஞானோதய வித்தியாலய புதுக்கட்டடத் திறப்புவிழா இம்மாதம்10-ந்திகதி வெள்ளிக்கிழமை நடைபெறவிருக்கிறது. கல்விப் பரிசோதகர் திரு. ச. சபாபதி விழாவிற்குத் தலைமைவகிப்பார். வட்டுக்கோட்டை எம். பி. திரு. அ. அமிர்தலிங்கம் புதியகட்டடத்தைத் திறந்து வைப்பார்.


நவாலியூர்

பிரம்மஸ்ரீ ச. சுப்பிரமணியஐயர் அவர்கள் கூறுகிறார்கள்:

**சுந்தரம் பிறதர்ஸ்**

ஸ்தாபனத்தாரால் விநியோகிக்கப்படும்

**பச்சை சந்தனம்**

கோவில் தேவைகட்கும் மற்றும் மங்களக்காரியங்களுக்கும் சிறந்தது.

இறைவன் திருமேனியில்

**சந்தனக் காப்பிட்டு**

அவனின் திருவருளைப் பெறுவதற்கும் சிறந்த வஸ்துவாக அமைகிறது.

**சுந்தரம் பிறதர்ஸ்**

(கோவில் அபிஷேக திரவிய வியாபாரிகள்)

73, மின்சாரநிலைய வீதி — யாழ்ப்பாணம்.


## ஜி. ஜி. யை வரவேற்க ஏற்பாடு

பருத்தித்துறை, செவ்.

ஐ. நா. சபைக்கு இலங்கைப்பிரதிநிதிகள் குழுவின் தலைவராகச்சென்று தாயகம் திரும்பவிருக்கும் தமிழ்க் காங்கிரஸ் தலைவர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலத்துக்கு மாபெரும் வரவேற்பொன்றளிப்பதென நேற்றையதினம் இங்கு நடைபெற்ற கூட்டமொன்றில் முடிவுசெய்யப்பட்டது.

நகரசபையின் தலைவர் திரு. ந. நடராசா தலைமையில் நடைபெற்ற மேற்படி கூட்டத்தில் இவ்வரவேற்புக்கு உடுப்பிட்டி எம். பி. திரு. மு. சிவசிதம்பரம், வவனியா எம். பி. திரு, த. சிவசிதம்பரம் ஆகியோரையும் அழைப்பதெனவும் மூடிவுசெயயப்பட்டது.

## புகலிடம் கொடுத்தாராம் 1000 ரூபா பிணை

பருத்தித்துறை, செவ்.

கரவெட்டியைச் சேர்ந்த வீரகத்தி செல்வகுலசிங்கம், வேலுப்பிள்ளை வீரகத்தி ஆகிய இருவர்மீதும் கே. பாலன்என்னும் சட்டவிரோதக் குடியேற்றக்காரரை மறைத்தும், புகலிடம்அளித்தும் வைத்திருந்ததாகக் குற்றஞ்சாட்டிப் பொலிசாரால் தொடரப்பட்ட வழக்கு பருத்தித்துறைநீதிபதி திரு. ஹெருபேட் சில்வா முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது.

அட்வக்கேட் திரு. எம். சிவசிதம்பரம் எதிரிகள் சார்பில் ஆஜரானார்.

கே. பாலன் என்பவர் விசாரணை செய்யப்பட்ட பின் மிகுதிவிசாரணையை ஒத்திவைத்து எதிரிகள் இருவரையும் தலா 1000 ரூபா பிணையில் செல்ல நீதிபதி உத்தரவிட்டார்.

## அச்சுவேலிக்கு மின்சாரம்

யாழ்ப்பாணம், செவ்.

அச்சுவேலிக் கிராமசபை எல்லைக்குட்பட்ட பகுதி 1966ம் ஆண்டு ஜனவரி மாதம் 14ம் திகதிக்கு முன் மின்சாரம்பெறுவதற்கேற்ற ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. ஜனவரி 14ம் திகதி அச்சுவேலி பிரதான பகுதிக்கு முதலில் மின்சாரம்கிடைக்கும் என்றும் பின் படிப்படியாக கிராமத்தின் உட்பகுதிகளுக்கும் விநியோகிக்கப்படும்என்றும் தெரிய வருகிறது.

## கிராமசபைத் தேர்தல்

சுழிபுரம், செவ்.

சுழிபுரம் கிராமசபையின் பொதுத்தேர்தல் புதுவருட முதல்வாரத்தில் நடைபெறவிருக்கிறது. இதற்கானநியமனப்பத்திரம் இம்மாதம் 10-ந் திகதி ஏற்றுக்கொள்ளப்படும். மொத்தம் பதினாறு வட்டாரங்களையுடைய இக்கிராமசபையில் பல வட்டாரங்களில் அங்கத்தவர்களைப் போட்டியின்றி தெரிவு செய்வதற்கு பொதுநல மன்றங்கள் முயற்சிசெய்து வருகின்றன.

# "புதிய போர்வையில் இனக் கலவரம்"

## அனுமதிக்க மாட்டேன் என பிரதமர் உறுதி

காலி, செவ்.

''1958-ம் ஆண்டு இனக் கலவரத்தைப் போன்று, புதிய போர்வையில் இனக் கலவரமொன்றைத் தூண்டிவிடுவதற்கு ஸ்ரீலங்கா சுதந்திராவும், இடதுசாரிக் கட்சிகளும் வழிவகுக்கின்றன. ஆனால் எனது ஆட்சியில் இப்படியானதொரு இனக்கலவரம் நடப்பதற்கு ஒரு பொழுதும் விடமாட்டேன். இந்நாடு, இந்நாட்டில் வாழும் ஒவ்வொருவருக்கும் சொந்தம். எந்த மதத்தைச் சேர்ந்தவரானாலும், எந்த மொழி பேசுபவராயிருந்தாலும் அச்சமின்றி தலைநிமிர்ந்து 'இது என் பிறந்த நாடு' என்று சொல்வதற்கு ஒவ்வொருவருக்கும் உரிமை உண்டு.''

பிரதம மந்திரிக்கும்,இதர அமைச்சர்களுக்கும் காலியில் அளிக்கப்பட்ட வரவேற்புக் கூட்டமொன்றில் பிரதமர் டட்லி சேனநாயக்கா பேசுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

திரு. அபயகுணவர்த்தன தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் பிரதமர் டட்லி சேனநாயக்கா மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது:-

''1958-ம் ஆண்டு இனக் கலவரத்துக்குக் காரணகர்த்தாக்களாக இருந்தவர்கள் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினரும், இடதுசாரிக் கட்சிகளுமே! அவர்கள்தான் இன்னுமொரு இனக்கலவரத்துக்கு வித்திட்டுவருகிறார்கள். என் ஆட்சியில் அது ஒரு பொழுதும் நடக்காது; நடக்கவும் விடமாட்டேன். இந்நாட்டின் சகல மக்களும் ஒரே தாய் வயிற்றுப் பிள்ளைகள்போல பாதுகாக்கப்படுவர்.''

ராஜாங்க மந்திரி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன பேசுகையில், சிங்களம் இந்நாட்டின் அரசாங்க மொழியாக இருந்தாலும் தமிழுக்கும் அதற்குரிய இடம் அளிக்கப்படுமென்று சொன்னார்.

உள்நாட்டமைச்சர் டாக்டர் டபிள்யூ. தஹநாயக்கா பேசுகையில், கடந்த அரசாங்கம் செய்யத்தவறியவற்றை இந்த அரசாங்கம் செய்யுமென்று உறுதி கூறினார்.

திருவாளர்கள் குலநாயகம், நடராசா, முருகையா கௌரிதாசன் ஆகியோரும் பேசினர்.

## மந்திரியின் யாழ். விஜயம்

யாழ்ப்பாணம், செவ்.

போக்குவரத்து மந்திரி திரு. ஹுருலே வரும் ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணத்துக்கு விஜயம்செய்யவிருக்கிறார்.

மந்திரியாழ்ப்பாணம்சென் பற்றிக்ஸ் கல்லூரி பரிசளிப்பு விழாவில் கலந்து கொள்வார்.

இங்கு விஜயம் செய்யும் மந்திரி இங்குள்ளபலமுக்கிய இடங்களுக்கும் செல்வார் என அறியப்படுகிறது.

## பாடசாலைகளின் நிலை குறித்து எம்.பி. மகஜர்

யாழ்ப்பாணம், புதன்

கல்வி மந்திரிக்கு கிளிநொச்சிப் பாராளுமன்ற உறுப்பினர் கிளிநொச்சிப் பாடசாலைகளின் தரத்தை உயர்த்துவதின் அவசியம் பற்றி ஒரு விரிவான மகஜர் சமர்ப்பித்துள்ளார். இவ்வறிக்கையில் கிளிநொச்சித் தொகுதியிலுள்ள 25 பாடசாலைகள் போக்குவரத்தின்மை, கட்டடவசதியின்மையுடன் இருக்கின்றவென்றும் இங்கு கடமையாற்றும் ஆசிரியர்கள் 2 வருட முடிவில் இடமாற்றம் செய்யப்படவெண்டுமென்றும் 19 பாடசாலைகளில் ஆசிரியைகள்இல்லைஎனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. 25 பாடசாலைகளில் ஆங்கில ஆசிரியர்கள் இல்லையென்பதுபற்றியும் 15 பாடசாலைகளில் 19 ஆசிரியர்களின் இடம் காலியாக இருப்பது பற்றியும் 10 பாடசாலைகளில் தலைமை ஆசிரியர்கள் இல்லையென்பது பற்றியும் அறிக்கையில் விபரம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மழையைத் தொடர்ந்து......

வல்வெட்டித்துறை, செவ்.

சென்ற சில தினங்களாக பெய்த பெரு மழையினால் தொண்டமானாற்றிலுள்ள ஆறு, குளங்களிலும், செல்வச் சந்நிதி முருகன் ஆலயமும் தண்ணீரினால் தேங்கி நிற்பதோடு, ஆற்றங்கரை ஓரங்களில் இருப்போர் எந்நேரமும் பயத்துடனே இருக்கவேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

வல்வெட்டித்துறையில் திருவில் குளம் நிரம்பி அயலிலுள்ள பித்தனை, திருவில் பகுதி மக்களை தங்கள் வீடுகளை விட்டு வேறு இடங்களுக்கு செல்லவேண்டிய நிலைமைக்குக் கொண்டுவந்திருக்கிறது.

அல்வாய் சின்ன ஆலடியைச் சுற்றியுள்ள தாழ்ந்த இடங்களில்வசித்த பலகுடும்பங்கள் தங்கள் வீடுகளுக்குள் வெள்ளம் குடிகொண்டதால் வீடுவாசல்களை இழந்து மனைவி மக்களுடனும் பொருள் பண்டங்களுடனும் தன் சுற்றத்தவர் வீடுகளுக்கும் அயலார் வீடுகளுக்கும் போய் குடியேறியுள்ளனர்.

நேற்று பருத்தித்துறை - கீரிமலை பஸ் ஒன்று பிரயாணிகளுடன் தொண்மானறு சந்திக்கருகில் பாதையைவிட்டு விலகி பாதையின் கரையோரத்தில் புதைந்து கொண்டது. பிரயாணிகள் ஒருவிதமாகத்தப்பிக்கொண்டனர்.

தஞ்சை, டிச. 7

தஞ்சையில் பெருமழை காரணமாக 5000 ஏக்கர் நெல்வயல் நீரில் மூழ்கிவிட்டதாய் அறிவிக்கப்படுகிறது.


அழுக்கணவன், புழு, பூச்சி 3-ம் அழிப்பதற்கு புதிய ஜெர்மன் மருந்து

BAYER

**பொலித்தியோன்**

FOLITHION

விநியோகஸ்தர்கள் இல்லாத கிராமங்களில் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

T'GRAMS:- ROYAEL ROYAL DISPENSARY PHONE: 397 JAFFNA.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## விளம்பரம்

### ஆயுள்வேத வைத்தியர் - உதவியாளர் விண்ணப்பம் கோரப்படுகின்றது

மேற்படி பதவிகட்குரிய விண்ணப்பங்களை மாந்தை - வடக்கு கிராமசபை கோருகின்றது. வேண்டும் விபரம் யாவற்றிற்கும் 9-12-65க்கிடையில் கீழ் வரும் விலாசதாருடன் தொடர்பு கொண்டு யாவற்றையும் அறிந்துகொள்க.

ஒப்பம்
சூ புல. யோசுவான்
கிராமசபைத் தலைவர்,
மாந்தை - வடக்கு,
1288 அடம்பன்.

### The Jaffna Academy-Chundikuli

Re-opens on Monday 10 th, January 1966. Admission Cards must be obtained on Saturday, 8th., January, 1966. Courses available for the follownig Examinations:-

1. G. C E , Ordinary Level August and December 1966.
2. University Entrance, G- C. E., Advanced Level December 1966 & 967
3. Survey Draughtsma ship and Elementary Survey- Survey General's Department Examination held in May 1967.
3. Civil Draughsmanship and Building Construction City & Guild's (London) Examination held in Mav 1967.
5. Preleminary Electrical Engineering City & Guild's (London) Examination held in May 1967.
6. Intermediate Examination in Electrical Engineering - City & Guild's (London) Examination held in May 1967,
7. Entrance Examination to Law College - November 1966.
8. Teachers' Certificate & Entrance to Training College.

Hostel accomondation available.

Apply befor 1st., January 1966 on forms obtainable in this office along with the admission fee of Rs. 25/-. Prospectus available in this office.

J. C. Handy, B. Sc.
(London)
Director.
The Jaffna Academy,
Chundikuli
Jaffna. 1254

## ராஜஸ்தான் பற்றி யுதாண்டு

ஐ. நா., டிச. 7

ராஜஸ்தான் பகுதியில் யுத்தநிறுத்தம் சரியான முறையில் இல்லை என்றும், அங்கு கைகலப்புக்கள் காணப்படுவதாயும் யுதாண்ட் பாதுகாப்பு சபைக்கு சமர்ப்பித்துள்ள அறிக்கையில் கூறியிருக்கிறார்.

யுத்தநிறுத்த மேற்பார்வையாளர் ஜெனரல்மக்டொனல்டின் அறிக்கையின் அடிப்படையில் யுதாண்ட் தனது அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

இதற்கிடையில் படைகளை வாபஸ் பெறுவது சம்பந்தமாக யுதாண்டின் விசேஷ பிரதிநிதி பிரிகேடியர் ஜெனரல் மொராம்பியோ நேற்று லாகூர் வந்து சேர்ந்தார். அவர் ஜெனரல் மக்டோனல்டைச் சந்தித்துப் பேசினர்.




"ஈழநாடு"

## வெற்றிக் கிண்ணத்துக்கான கரபந்தாட்ட சுற்றுப்போட்டி

யாழ்ப்பாணம், செவ்.

''ஈழநாடு'' வெற்றிக்கிண்ணத்துக்கான கரபந்தாட்டச் சுற்றுப்போட்டியை கடந்த இரு ஆண்டுகளாகத் திறம்பட நடாத்தி ரசிகர்களுக்கு விருந்தளித்த தெல்லிப்பழை ஒலிம்பிக் விளையாட்டுக்கழகம் அடுத்த வருடம் தைமாதத்தில் இச்சுற்றுப்போட்டியை மூன்றுவது முறையாக நடத்துகிறது.

மூன்றுவது தடவையாக நடைபெறும் இச்சுற்றுப் போட்டியில் 'ஏ' பிரிவு, 'பி' பிரிவு பழைய முறை, 'சி பிரிவு புதியமுறை ஆகியன அடங்கும். இம்முறை மேலும் சிறப்பான முறையில் இப்போட்டியைநடத்த ஒழுங்குகள் செய்யப்பட்டிருப்பதாக விளையாட்டுக் கழக அங்கத்தவர் ஒருவர் தெரிவித்தார்.

சகல போட்டிகளுக்குமான விண்ணப்பங்களை டிசம்பர் மாதம் 15-ந்திகதிக்கு முன்பாக நேரில் அல்லது பதிவுத் தபால் மூலம் அனுப்பவேண்டும். விண்ணப்பங்கள் யாவும் கழகத்தின் விண்ணப்பபத்திரத்திலேயே நிரப்பப்பட்டிருத்தல்வேண்டும்.

விலாசம்: சி. சண்முகராசா, யூனியன் கல்லூரி, தெல்லிப்பளை.

### வெள்ளிக் கிண்ணங்கள்

''ஏ'' பிரிவில் வெற்றி பெறுபவர்களுக்கு ''ஈழநாடு'' வெற்றிக் கிண்ணம், 'ஏ' பிரிவு 2-ம் இடம் பெறுபவர் தெல்லிப்பழை கிராமசபைத்தலைவரின் வெள்ளிக் கிண்ணம், 'பி' பிரிவு காலஞ்சென்ற செனட்டர் சு. நடேசபிள்ளை வெற்றிக்கிண்ணம், 'பி' பிரிவு இரண்டாம் இடம் பெறுபவருக்கு 'டயனு' அளிக்கும் வெற்றிக் கிண்ணம், 'சி' பிரிவு முதலிடம் பெறுபவர்களுக்கு திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் வெள்ளிக்கிண்ணம், 'சி' பிரிவு இரண்டாம்இடம் பெறுபவர்க்கு 'ஒலிம்பிக்' விளையாட்டுக் கழகத்தால் அளிக்கப்படும் வெள்ளிக் கிண்ணம்.

ஒவ்வொரு கழகமும் மூன்று பகுதியிலும் பங்குபற்றலாம்.




### கொழும்பு

புதன் 8-12-65

(செய்திகள்: காலை 7-15, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00).

344 மீற்றர் & 61 மீற்றர்

காலை 6-45 நாதாஞ்சலி, 6-50 சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-00 துதிப்பாடல்கள், 7-30 தேர்ந்தஇசை, 7-45 திரை இசை, 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

344 மீற்றர் & 49 மீற்றர்

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை.

344 மீற்றர் & 61 மீற்றர்

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 கவிதை மஞ்சரி.

இரவு 6-15 கிராமசஞ்சிகை, 6-45 புல்லாங்குழல், 7-30 விவாதமேடை, 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-15 வாத்தியஇசை, 9-30 நேயர் விருப்பம், 10-00 தேர்ந்த இசை.

### இடமாற்றம்

யாழ்ப்பாணம், புதன்

1961-ம் ஆண்டு தொடக்கம் யாழ்ப்பாண பஸ் நிலைய அதிகாரியாகக் கடமையாற்றிய திரு. ரி. தேவராசா இம்மாதம் 6-ந் திகதி முதல் யாழ். கிழக்கு இ. போ. ச. டிப்போவிற்கு மாற்றலாகிச் சென்றுள்ளார். பிரயாணிகளின் கஷ்டத்தை அவ்வப்போது கவனித்து நடவடிக்கை மேற்கொண்டவர் அவர்.

### மழையிலும் பரீட்சை

உடுப்பிட்டி, செவ்.

நேற்று 6-12-65-ல் ஆரம்பமானஜி.ஸி.ஈ. (சாதாரண) பரீட்சை வடமராட்சிப் பகுதியிலும் கொட்டும் மழையுடன் நடைபெற்றது. அநேக பரீட்சை ஸ்தானங்களில் பிற்பகல் நடைபெற்ற பரீட்சைகள்போதியவெளிச்சமின்மையால் பெற்றேமாக்ஸ் வெளிச்சத்துடன் நடைபெற்றன. மழை பெய்து கொண்டிருந்தமையால் பரீட்சார்த்திகள் குறிப்பிட்ட பரீட்சை நிலையங்களுக்குப் போக்குவரத்துச் செய்வது கஷ்டமாகவிருந்தது.

### நாவலர் விழா

யாழ்ப்பாணம். புதன்

காரைநகர் சைவமகா சபையினர் நாவலர் நினைவு நாளை வருகிற செவ்வாய்க் கிழமை கொண்டாடவிருக்கின்றனர். திரு. ச. சபாபதி தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் 'இராமாயண ரசிகமணி' ஸ்ரீ சி. எஸ். எஸ். மணிபாகவதரின் கதாப்பிரசங்கம் விசேஷ நிகழ்ச்சியாக இடம்பெறும்.

அடுத்த மாதம்

## உலக கம்யூனிஸ்ட் மகாநாடு

மாஸ்கோ, டிச. 7

அடுத்த மாதம் சர்வதேச கம்யூனிஸ்ட் கட்சி மகாநாடு ஒன்றைக் கூட்ட ரஷ்யா முயற்சித்து வருவதாய் அறிவிக்கப்படுகிறது. இந்த மகாநாட்டில் செய்யப்படும் சித்தாந்த விளக்கத்தை சீனு ஏற்க மறுத்தால் அது உலக கம்யூனிஸ முகாமிலிருந்து ஒதுக்கி வைக்கப்படும் எனக் கூறப்படுகிறது.


REGAL--JAFFNA
NOW SHOWING
PARIS CHAMPAGNE
(Sovcolor Color)
(Adults Only)


## வரி விளம்பரம்

### தேவை

நீர்வேலிவடக்கு இலக்குமி ஐக்கியபண்டகசாலைக்கு ஒரு மனேச்சர் தேவை. காசுப் பிணை ரூபா 1500/. ஆதனப் பிணை ரூ. 2000/- சம்பளம் ரூ. 120/- கூட்டுறவுப் பாடசாலையில் சாதாரண பயிற்சி பெற்றவராய் இருத்தல் வேண்டும். முடிவு திகதி 20-12-65. இ. செல்லத்துரை, 'அருளகம்' நீர்வேலி வடக்கு. 1450

கைத்தறியில் சேலைகள் நெய்யக்கூடிய அனுபவமுள்ளவர்கள், ரெடிமேட் உடுப்புகள் தைக்கக்கூடியவர்கள், சேலைகளுக்கு குஞ்சம் கட்டுதல், தபாலுறைகள் தயாரிக்கக்கூடியவர்கள், பழக விரும்புவோர் 10-12-65க்கு முன்னதாக மாதர் கைத்தொழில் அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், 29, பசார் லேன், யாழ்ப்பாணம் என்ற விலாசத்துக்கு கடித மூலமாகவோ, நேரிலோ விண்ணப்பிக்கவும். 1460

### தேவை

சிங்களமும் தமிழும் அச்சுக் கோர்க்கத் தெரிந்த ஒருவர் அல்லது சிங்களம் அச்சுக் கோர்க்கத் தெரிந்த மெசின் மைண்டர் ஒருவரும் சமையல் வேலை தெரிந்த ஒருவரும் 1-1-66 தொடக்கம் தேவை. திறமைக்குத் தக்க சம்பளம் கொடுக்கப்படும். 28-12-65க்கு முன் விபரங்களுடன் விண்ணப்பிக்கவும். மனேஜர், சக்தி அச்சகம், முள்ளியவளை. 1461

### தேவை

பிரதிநிதிகள் மேற்பார்வையாளர் தேவை. பிணைப்பணம் செலுத்தக் கூடியவர்கள் மட்டும் நற்சாட்சிப் பத்திரங்களுடன் நேரில் 10-12-65ல் வரவும். மெரிலாண்ட் இன்டஸ்றீஸ், 153, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 1463

### விநாயகசட்டி உற்சவம்

சித்தன்கேணி ஸ்ரீ மகா கணபதிப்பிள்ளையார் கோயில் விநாயகசட்டி உற்சவ லெட்சார்சனு விஞ்ஞாபனம் கார்த்திகை மாதம் 24-ந் திகதி (9-12-65) வியாழக்கிழமைதொடக்கம் மார்கழி மாதம் 13-ந் திகதி (28-12-65) செவ்வாய்க் கிழமை வரை நடைபெறும். சிவஸ்ரீ வை. மு. குமாரசாமிக் குருக்கள். 1464


வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க



ராஜா
(யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
சனி, ஞாயிறு 4 காட்சிகள்
எஸ். பாலச்சந்தர்
எல். விஜயலக்ஷ்மி
நடித்த
பொம்மை
தென்னகத்தில் 100 நாட்களுக்குமேல் ஓடி வெற்றி வாகை சூடிய திரைக்காவியம்!



7-வது வெற்றி வாரம்!
கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கொம்பனித்தெரு)
விஜிதா (ஹட்டன்) கல்யாணி (நாவலப்பிட்டி) லக்ஷ்மி (இரத்தினபுரி) சந்தியா (கம்பளை)
வெலிங்டன்
(யாழ்ப்பாணம்)
தினசரி 2 6, 9-30 மணிக்கு
தென்னாட்டில் 30 வாரங்களுக்குமேல் ஓடி திரைப்பட வரலாற்றில் புதிய சாதனையை ஏற்படுத்தியிருக்கும் மகத்தான வெற்றிச் சித்திரம்!
எம். ஜி. ஆர். — சரோஜாதேவி
(இருவேடங்களில்)
ரங்கராவ், நம்பியார், தங்கவேலு, ரத்னு, பண்டரிபாய், நாகேஷ், மாதவி, விஜயலக்ஷ்மி
நடித்த





விஜயா கம்பைன்ஸ்
எங்கவீட்டுப் பிள்ளை
(ஈஸ்மென்கலர்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதுக்கல் பொருள்கள்

# பறிமுதல் செய்யும் அதிகாரம் சகல மந்திரிகளுக்கும் இருக்கும்

கொழும்பு, திங்கள்

கள்ளமார்க்கட்டில்விற்கப்படும் பொருள்களையும், அதிக விலைக்கு விற்கப்படும் பொருள்களையும் பறிமுதல் செய்யும்அதிகாரத்தை சகல மந்திரிகளுக்கும் அளிக்க அரசாங்கம் முடிவுசெய்துள்ளது அமைச்சர்கள் தங்கள்அமைச்சுகளைச் சேர்ந்த இலாகாக்களின் கட்டுப்பாட்டிலுள்ள ஸ்தாபனங்கள் பதுக்கிவைத்திருக்கும் அத்தியாவசிய பொருட்களை பறிமுதல் செய்ய இதன்மூலம் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது, இப்பொழுதுவர்த்தக அமைச்சருக்கும், உணவுவிவசாய அமைச்சருக்குமே பொருட்களை பறிமுதல் செய்ய அதிகாரமுண்டு.

இப்பொழுதுகறுப்புமார்க்கட்டில் விற்கப்படும் வேறு பல பாவனைப் பொருள்களையும் விலைக்கட்டுப்பாட்டுத் திட்டத்தின் கீழ் கொண்டு வருவதென அரசாங்கம் முடிவுசெய்துள்ளது.

வாழ்க்கைச் செலவைக் குறைக்கவும்,. பாவனைப் பொருள்களை பொதுமக்கள் இலகுவில் பெறவுமே அரசாங்கம் இந்தநடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

புரட்சிச் சதி

## வழக்கு தள்ளுபடி

கொழும்பு, திங்கள்

1962 ஜனவரி 27-ம் திகதி நடைபெற்ற புரட்சிச் சதியில் ஈடுபட்டதாக குற்றஞ்சாட்டி கேர்ணல் டி. அல்விஸ், கேர்ணல் அபயசிங்கி ஆகியோர் மீது தொடரப்பட்ட வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது.

நீதியரசர்கள் ஜி. பி. ஏ. சில்வா, மாணிக்கவாசகர், அலெஸ் ஆகியோர் முன்னிலையில் இவ்வழக்கு இன்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

## சிறிமா வீட்டுக்கு காவல்

கொழும்பு, திங்கள்

எதிர்க்கட்சித் தலைவர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவின் வாசஸ்தலத்தை பொலிஸார் காவல் புரிந்து வருகின்றனர்.

சென்ற சனிக்கிழமை இரவு ஏறற்ரேட்டில் உள்ள தமது வாசஸ்தலத்துக்குள் யாரோ வெடிகளை கொழுத்தி எறிந்ததாக பொலிசாருக்கு திருமதி பண்டாரநாயக்கா முறைப்பாடு செய்திருந்தார். சனிக்கிழமை நள்ளிரவில் வெடிச்சத்தம் கேட்டு தனது வீட்டின் 'பல்கனி'க்குச் சென்று பார்த்தபோது ஒரு கார் விரைந்து சென்றதாகவும் அந்தக்காரில் சென்றவர்களே வெடிகளை வீசியிருக்க வேண்டும் எனவும் அவர் பொலிசுக்கு முறையிட்டார். பொலிசார் இது குறித்து தீவிர புலன்விசாரணை நடத்திவருகின்றனர்.

## மந்திரியை சந்திப்பார்

கோண்டாவில், திங்

சுருட்டு உற்பத்தியாளர் சங்கக்காரியதரிசி திரு. சி. அ. த. வடிவேலு சுருட்டுஉற்பத்தியாளர்விற்பனவுவரிவிஷயமாக வியாழக்கிழமை ஒன்பதாம் திகதி நீதிமந்திரியை அவரது காரியாலயத்தில் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்துவார்.

சாட்சியமளிப்பர்

## முன்றுமுன்னுள் மந்திரிகள்

கொழும்பு, திங்கள்

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, கூட்டரசாங்கங்களின் ஆட்சிக்காலத்தில் நிதிமந்திரியாக இருந்தவர் மக்கள் வங்கி விசாரணைக் கமிஷன் முன்நிலையில் சாட்சியமளிக்கஅழைக்கப்பட்டுள்ளனர்.

திருவாளர்கள் பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயகா, ரி. பி. இலங்கரத்ன, டாக்டர் என். எம். பெரேரா ஆகியோரே இவர்கள். இம்மாதம் 13-ந் திகதி இவர்கள் கமிஷன்முன்னிலையில் சாட்சியமளிப்பர் என நம்பப்படுகிறது.

## கொழும்பில் ரஷ்ய உதை. வீரர்கள்

கொழும்பு, திங்கள்

21 பேர்களைக் கொண்ட ரஷ்ய உதைபந்தாட்டக் கோஷ்டி இன்று கொழும்பு வந்தது. இலங்கையில் 3 போட்டிகளில் அவர்கள் கலந்து கொள்வார்கள். வருகிற 8-ம் திகதி மாலை 6-45-க்கு மின்வெளிச்சத்தில் முதலாவது போட்டி ஆரம்பமாகும்.

## போட்டியின்றித் தெரிவு

வவனிக்குளம், செவ்.

வன்னிவிளாங்குள கிராம சேவையாளரின் பகுதியான 1-ம், 2-ம், 3-ம், 4-ம் வட்டாரங்களில் அங்கத்தவர்கள் போட்டியின்றித்தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

1-ம் வட்டாரம்: திரு. எஸ். சிவஞானம், வன்னிவிளாங்குளம்; 2-ம் வட்டாரம்: திரு. வே. சு. நடராஜா, வவனிக்குளம்; 3-ம் வட்டாரம்: திரு. ஏ. சுப்பிரமணியம், கிடாப்பிடித்தகுளம்; 4-ம் வட்டாரம், திரு. ஞா. குமாரசாமி: கொம்புவைத்தகுளம்.

## அரவம் தீண்டியவர் குணமடைகிறார்

யாழ்ப்பாணம், செவ்.

நாச்சிமார்கோவிலடி வீதியைச் சேர்ந்த வேலு சின்னராசா என்பவருக்கு வட்டுப்பிடையன் பாம்பு தீண்டியதால் மயக்கமுற்ற நிலையில் கொட்டடி பாம்புக்கடி வைத்திய நிபுணர் திரு. க. சிற்றம்பலத்திடம் கொண்டு வரப்பட்டார். சிகிச்சைக்குப் பின் தற்போது அவர் குணமடைந்துவருவதாக அறியப்படுகிறது.

யாழ்ப்பாணம், செவ்.

நாளை புதன்கிழமை பகல் வீமன்காமம் தெல்லிப்பளையிலுள்ள ஸ்ரீ வீரபத்திர சுவாமி கோவிலில் புதிய அசையாமணி சைவாசார முறைப்படி புதிதாகக் கட்டிய மணிக்கோபுரத்தில் ஏற்றிவைக்கப்பட விருக்கிறது. மேற்படி வைபவத்தை மாவிட்டபுரம் தேவஸ்தான பிரதம குருக்கள் சிவ ஸ்ரீ சண்முகநாதக் குருக்கள் செய்து வைப்பார்.

யாழ்ப்பாணம் சுந்தரம் பிறதர்ஸ் மருந்துக்கடை, திரு. க. குணநாயகம் இதனை அன்பளிப்புசெய்துள்ளார்.

## நாட்டைக்காக்க . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ருல் இந்நாட்டின் உத்தியோக மொழியாகச் சிங்களம் இருக்கமுடியுமா? இதர ஏழு மாகாணங்களில் கூட சிங்களம் அமுல்நடத்தப்படவில்லை. இலங்கை முழுவதிலும் பிறப்புப்பதிவு, விவாகப்பதிவு, இறப்புப்பதிவு யாவும் தமிழில் நடைபெறுமாளுல்சிங்களம்எங்கே?

சிங்களத்தில் தேர்ச்சி பெருத காரணத்துக்காக வேலையிலிருந்து நீக்கப்பட்டவர்கள் மீண்டும் வேலைக்கு அழைக்கப்பட்டுள்ளதுடன் பதவி உயர்வும் சம்பளஉயர்வும் வழங்கப்பட்டுள்ளனர்.

இராணுவத்தில் கத்தோலிக்கர்களே இன்னும் உயர் பதவிகள் வழங்கப்பட்டுள்ளனரென்றும் திருமதி பண்டாரநாயக்கா கூறினர்.

திருவாளர்கள் ஆர். எஸ். பெரேரா, டி. பி. தென்னக்கூன், ஆர். ஜி. சேனநாயகா ஆகியோரும் பேசினர்.

## தபால் . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இராமாயணத்தின் தரத்திற்கேற்ப அல்லது அதைவிட உயர்வாக கம்பராமாயணம் மதிப்பிடப்படுகிறது.

இங்கிலாந்தில் மகாகவி ஷேக்ஸ்பியரின் திருவுருவம் தாங்கிய தபால் முத்திரைகள்அவரது 400வது ஜன்மதினத்தன்று வெளியிடப்பட்டது ஞாபகமிருக்கும். பிரிட்டிஷ் அரசியின் தலையுடன், ஷேக்ஸ்பியரின் தலையும் அதில் ஒன்ருகப் பொறிக்கப்பட்டது பிரிட்டனின் சரித்திரத்திலேயே இல்லாத ஒரு புதுமை என்பது குறிப்பிடத்தக்கது.

## நாட்டிலும் நகரிலும்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

வாக்கிய பஞ்சாங்கம் இதைப் பற்றி ஒன்றுமே கூறவில்லை. பூமியின் நிழல் சந்திரனில் பொழிப்பாக ஸ்பஷ்டமாக படியாது என்ற காரணத்தால் அவர்கள் போடாமல்விட்டார்களோ என்னவோ தெரியவில்லை. இது எப்படியாயினும் கடந்த ஒருமாதகாலத்துக்குள் வானமண்டலத்தில் எத்தனை மாற்றங்கள்தான் ஏற்பட்டிருக்கின்றன. சூரிய கிரகணம், வால்நட்சத்திரம் சுக்கிரன் செவ்வாய் இவர்களின் இடப்பெயர்ச்சி, சந்திர கிரகணம் இவையெல்லாம் ஒருமாதத்தில் நிகழ்கின்றன. சோதிடத்தில் நம்பிக்கை உள்ளவர்கள் இவற்றில் பலவிதமான அர்த்தங்களைப் புரிந்து கொள்வார்கள். வருகிற ஜனவரி மாதத்தில் தவிர்க்க முடியாத ஒரு பெரும் வெள்ளப்பெருக்கினுல் இலங்கையில் பேராபத்து வருமென்று பருத்தித்துறை சோதிடர் ஒருவர் அரசாங்கத்துக்கு எச்சரிக்கை கூறியிருக்கிருராம். ரொடீஷியாவில் நடந்த வெள்ளையர் புரட்சி வால்நட்சத்திரத்தின் பலாபலனென்று வேறு சிலர் கூறுகிருர்களாம் கடந்த பத்து நாட்களாக வடக்கிலும் கிழக்கிலும் பெய்து கொண்டிருக்கும் பேய் மழைக்கும் இந்தக் கோள் மாற்றங்களுக்கும் ஏதாவது தொடர்பு இருக்குமா? போனவருடம் டிசம்பர் மாதத்தில் அடித்த கோரப் புயல் இவ்வருடமும் தொடர்ந்து வருமா?

நல்லவேளையாகத் திங்கட்கிழமை பிற்பகல் வடக்கு, வடகிழக்குப் பகுதிகளில் புயல் அடிக்குமென்று நமது சொந்த வளிமண்டல ஆராய்ச்சிப் பகுதி வெளியிட்ட ஜோஸ்யம் யாழ்ப்பாணத்தைப் பொறுத்த வரையில் பொய்த்துவிட்டது.

[illegible]

## ஆசிரியர் இடமாற்ற . . .

1-ம் பக்கத் தொடர்ச்சி

இருக்கும்என்று நான் கருதவில்லை. தென்னிலங்கையில் வசிக்கும் தமிழ்க்குழந்தைகளுக்கு தமிழையும் தமிழ் மூலம் கல்வியையும் கற்பிக்கவேண்டியது அத்தியாவசியமாகும். ஆசிரியர்கள் இல்லாத காரணத்தினுல் தமிழ்பாடசாலைகளை மூடவும், தமிழ்ப்பிள்ளைகளுக்கு சிங்களத்தையும், சிங்களம் மூலம் கல்வியையும் ஊட்டும் நிலைமை உருவாகிக் கொண்டுவருவதை தமிழ் பாராளுமன்ற உறுப்பினர் பார்த்துக்கொண்டிருக்க முடியாது. எனவேதான் தமிழரசுக் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்களைப் பொறுத்தவரையில், நாங்கள் தமிழ் பாடசாலைகளையும், தமிழ் பகுதிகளையும் மூடக்கூடாதென்றும், தமிழ் குழந்தைகளுக்குத் தமிழ் மூலமே கல்வி கற்பிக்க வேண்டுமென்றும், அரசாங்கத்தை வற்புறுத்தினேம்.

### சிக்கலான பிரச்னை

ஆசிரியர்களுடைய இடமாற்றம் ஒரு மிகவும் சிக்கலான பிரச்னை என்பதை நன்கு உணருகிருேம். தமிழாசிரியர்களுடைய நலனைப் பாதுகாத்துக் கொள்ளும் தொழிற்சங்கங்கள் பலவுள. இச்சங்கங்கள் யாவும் ஒன்று சேர்ந்து ஒரு சுமுகமான மாற்றத் திட்டத்தை ஒற்றுமையாக வகுத்துக்கொடுத்தால் பிரச்னைக்கு இடம் இல்லை. அப்படியாக கொடுக்க முடியுமா என்பதனை ஆராயும் பொருட்டு அரசினர் பாடசாலை தமிழாசிரியர் சங்கப் பிரதிநிதிகளையும், சுவீகரிக்கப்பட்ட பாடசாலைகளின் ஆசிரியர்களுக்குரிய சங்கங்களாகிய அகில இலங்கை தமிழாசிரிய சங்க பிரதிநிதிகளையும் அழைத்து, சென்ற மாதம் பாராளுமன்ற கட்டடத்தில் ஒரு ஆலோசனைக் கூட்டத்தை நடத்தினேம்.

### திட்டத்தை உருவாக்கவில்லை

அக்கூட்டத்தில் பல்வேறு கருத்துகளைத் தெரிவித்தார்களேயன்றி ஒரு சுமுகமான எல்லோரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய மபுற்றத் திட்டத்தை உருவாக்க முடியவில்லை. இதையடுத்து வட மாகாண ஆசிரியர் சங்கமும் ஓர் ஒற்றுமையை ஏற்படுத்த முயற்சித்தது. அதிலும் பலன் கிடைக்கவில்லை. பாராளுமன்ற உறுப்பினர்களைப் பொறுத்தவரையில், எந்தவிதமான மாற்றத்திட்டத்தையும் அரசாங்கத்திற்குச் சமர்ப்பிக்கவில்லை. ஆனுல் தென்னிலங்கையில் உள்ள ஆசிரியர் பற்றுக்குறையை நீக்கவேண்டுமென்றும் ஆசிரியர் மேலதிகமாக இருக்கும் பகுதிகளிலிருந்து மேலதிக ஆசிரியர்களை மாற்றியும், புதிய நியமனங்கள் செய்தும் தென்னிலங்கைப் பாடசாலைகளிலுள்ள காலியான இடங்களை நிரப்பவேண்டுமென்று மட்டுமே கோரியிருந்தோம்.

### இடமாற்றத்தில் தலையிடுவதில்லை

கல்விமந்திரி தான் ஆசிரியர் மாற்றங்கள் செய்யப் போவதாகவும் இதில் பாராளுமன்ற உறுப்பினர்களுடைய ஒத்துழைப்பைக் கோரியும் இருந்தார். தமிழரசுக்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்களைப் பொறுத்த வரையில் கட்சியின் நிர்வாகக்குழு ஆசிரியர் இடமாற்றங்களில் தலையிடவேண்டாமெனப் பணித்துள்ளது. இதேபோல, இதர பாராளுமன்ற உறுப்பினர்களும் கல்வி மந்திரியின் வேண்டுகோளுக்கிசைந்து ஆசிரியர் இடமாற்றங்களில் தலையிடமாட்டார்களென்று எண்ண இடமுண்டு. ஆனுல் இடமாற்றங்களினுல் பிள்ளைகளின் கல்வி பாதிக்கப்படுமாயின் அல்லது தமிழ்ச் சமூகத்துக்கு அநீதி இழைக்கப்படுமாயின் பாராளுமன்ற உறுப்பினர்கள் பார்த்துக்கொண்டு வாளாவிருப்பார்களென்பது அர்த்தமல்ல. தலையிடவேண்டிய நிலைமை உருவாகினுல் தலையிடவேண்டிய உரிமையை அவர்கள் இழந்துவிடவில்லை.

### இது ஓர் இனப்பிரச்னை

முக்கியம் என்னவென்ருல் இலங்கையின் எப்பாகத்திலாவது ஆசிரியர்கள் இல்லையென்ற காரணத்தினுல் தமிழ்க்குழந்தைகள் இனமாற்றம் செய்யப்படக்கூடிய நடவடிக்கைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கவேண்டியதே. இது ஓர் இனப்பிரச்னை. இவற்றைச் சொல்லும்போது ஆசிரியர்கள் தொழிற்சங்கங்களின் கோரிக்கைகள் நீதிநியாயமற்றவை என்பதல்ல கருத்து. அரசினர் பாடசாலை ஆசிரியர் கோரிக்கைகளிலும் நீதியுண்டு; நியாயமுண்டு. அதேபோல சுவீகரிக்கப்பட்ட பாடசாலைகளின் தமிழாசிரியர் சங்கங்களில் நீதிநியாயம் நிரம்ப உண்டு. உதாரணமாகப் பதவி உயர்வு விஷயத்தில் சுவீகரிக்கப்பட்ட பாடசாலை ஆசிரியர்கள், பாரபட்சமாக நடத்தப்படுகிருர்களென்பது உண்மை. ஆனுல் இவற்றையெல்லாம் தீர்த்தபின்தான் தென்னிலங்கைத் தமிழ் குழந்தைகளுக்கு தமிழ்மூலம் கல்வி கற்பிப்பதற்கு ஆசிரியர்கள் அனுப்பப்படவேண்டும் என்பதுதான் தவறு.

### சுமுகமான திட்டத்துக்கு வழி

ஒருசரியான திட்டத்தை வகுத்தபின்தான் ஆசிரியர்களை மாற்றவேண்டுமென்று சொல்வதும் உகந்ததல்ல. ஒருதிட்டத்தைவகுப்பதற்கு முதற்படியை எடுக்கவேண்டும். முதலாவது நடவடிக்கையை எடுத்து, தென்னிலங்கைக்கும், வடஇலங்கைக்கும், ஆசிரியர்கள் தேவையில் வேறுபாடின்றி நிலைமையைச் சீர்ப்படுத்தினுல், எல்லோராலும் ஏற்றுக்கொள்ளக்கூடியஒருசுமுகமான திட்டம் பிறக்கும் என்பதே எனது நம்பிக்கை. இந்த நேரத்தில் சுவீகரிக்கப்பட்ட பாடசாலை ஆசிரியர்களுக்கும், அரசினர் பாடசாலை ஆசிரியர்களுக்கும்உள்ளவித்தியாசத்தை நீக்குவதில் பாராளுமன்ற உறுப்பினர்கள் தம்மால் இயன்றவரை உழைப்பார்கள் என்பது உறுதி.

சில ஆசிரியர்கள்இந்தஇடமாற்ற பிரச்னையை முன்வைத்து, தமிழரசுக் கட்சிக்கும் தமிழ்க் காங்கிரசிற்குமிடையே ஒரு அரசியல் போட்டியை ஏற்படுத்தி, அரசாங்கத்தின் முயற்சியை முறியடிக்க நடவடிக்கை எடுக்கிருர்கள் என்றுஎண்ண இடமுண்டு. ஆசிரியர் தொழிற்சங்க மேடைகளை அரசியல்மேடைகளாக மாற்றக்கூடாதென்பது எனது வேண்டுகோள்.

## பேராதனை மாணவரும் வேலை நிறுத்தம்

கொழும்பு, செவ்.

கொழும்பு குதிரைப்பந்தய பல்கலைக்கழகப்பிரிவு மாணவர்கள் தொடர்ந்து விரிவுரைகளைப் பகிஷ்கரித்து வேலைநிறுத்தம் செய்துவருவதைத்தொடர்ந்து அவர்களுக்குக் கதவடைப்புச் செய்வதற்கு சர்வகலாசாலை அதிகாரிகள் திட்டமிட்டிருந்தசமயம் பேராதனை சர்வகலாசாலைமாணவர்கள் ஐயாயிரம் பேர் இன்று வேலை நிறுத்தம் ஆரம்பித்துள்ளனர். இந்த மாணவர்கள் 12 கோரிக்கைகளை முன்வைத்துள்ளனர்

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி: 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் [illegible] ஆண்டு டிசம்பர் மாதம் 8ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org